19.01.2017

தினமணி

**தானியங்களைத் தாக்கும் அந்துப் பூச்சியை கட்டுப்படுத்தும் மேலாண்மை**

**திருவள்ளூர்**: கிடங்குகளில் சேமிக்கப்படும் தானியங்களை அந்துப் பூச்சி தாக்குதலிலிருந்து பாதுகாக்க பூச்சி மேலாண்மையை கடைப்பிடிக்க வேண்டும் என திரூர் வேளாண் அறிவியல் நிலையத்தினர் அறிவுறுத்தியுள்ளனர். இதுகுறித்து வேளாண் அறிவியல் நிலைய பூச்சியல் துறை உதவி பேராசிரியர் சுமதி கூறியதாவது:

திருவள்ளூரை அடுத்த கொளுந்தலூரில் இயங்கி வரும் விதைப்பண்ணையில் ஆய்வு மேற்கொண்டதில் அங்குள்ள தானியங்களில் அந்துப் பூச்சியின் தாக்குதல் அதிகரித்துள்ளது தெரியவந்துள்ளது. இப்பூச்சிகள் நெல், சோளம், பார்லி, கோதுமை ஆகிய தானியங்களை குடைந்து, கடைசியில் உமி மட்டுமே மிஞ்சும். இவை 19 நாள்களில் நன்கு வளர்ச்சியடைந்து, தானியத்தின் உள்ளேயே கூட்டுப் புழுவாக மாறுகின்றன. இக்கூட்டுப்புழுவிலிருந்து 5 நாள்களில் தாய்ப்பூச்சிகள் தானியத்திலிருந்து சிறிய துவாரத்தின் மூலம் வெளிவரும்.

சேமிப்புக் கிடங்குகளில் பூச்சி மேலாண்மை: சேமிப்புக் கிடங்கின் சுவர் வெடிப்புகள், துவாரங்கள் மற்றும் மூலைகள்

போன்ற இடங்களை பிரஷ் மூலம் நன்றாக சுத்தம் செய்ய வேண்டும். தானியத்தின் ஈரப்பதத்தை 10 சதவீதத்துக்கு குறைவாக பராமரிக்க வேண்டும்.

சேமிக்க பயன்படுத்தும் அனைத்தையும் வெயிலில் நன்கு உலர்த்த வேண்டும். மூட்டைகளை மரத்தாங்கிகள் மீது இருவரிசைகளுக்கிடையே 0.75-1.00 மீட்டர் இடைவெளியிலும் சுவர்கள் மீது மோதாமலும் அடுக்க வேணடும்.

சேமிப்புக்கிடங்கின் சுவர், நடைபாதைகள், மரத்தாங்கி, சாக்குகள் மீது ஒரு லிட்டருக்கு 10 மில்லி லிட்டர் என்ற அளவில் மாலத்தியான்-50 தெளிக்க வேண்டும். வாயூ நச்சு: ஒரு டன் தானியத்துக்கு 3 செல்பாஸ் மாத்திரை வீதம் பயன்படுத்தலாம். 28 கன மீட்டர் அளவுள்ள சேமிப்புக் கிடங்குக்கு 21 செல்பாஸ் மாத்திரைகளை பயன்படுத்தலாம். இவற்றை தார்ப்பாய் கொண்டு மூட வேண்டும். தார்ப்பாயின் முனைகளை களிமண்ணைக் கொண்டு பூசி, காற்றோட்டமில்லாதவாறு பாதுகாக்க வேண்டும். 5-6 நாள்களுக்கு பிறகு தார்ப்பாயின் முனைகளை பிரித்து காற்றேட்டம் ஏற்பட்ட சில மணி நேரத்துக்கு பிறகே கிடங்கின் உள்ளே செல்ல வேண்டும். இந்த முறைகளைப் பயன்படுத்தி அந்துப் பூச்சி மேலாண்மையை கடைப்பிடித்து தானியங்களை பாதுகாக்கலாம் என்றார்.

**வறட்சி பாதிப்பு: விவசாயிகள் ஒருவர்கூட விடுபடாத வகையில் கணக்கெடுப்புப் பணி ஆட்சியர் உத்தரவு**



சேலம் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஒருவர் கூட விடுபடாத வகையில் கணக்கெடுப்புப் பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என ஆட்சியர் வா.சம்பத் உத்தரவிட்டார். சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களைக் கணக்கெடுக்கும் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கான பயிற்சி கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஆட்சியர் வா.சம்பத் பேசியது:

தமிழகத்தில் பருவமழை பொய்த்ததைத் தொடர்ந்து, விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்பை ஈடுசெய்யும் வகையில் தமிழக அரசால் முதல் கட்டமாக மாவட்டம் வாரியாக கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, நேரடியாக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சேலம் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை முழுமையாகக் கணக்கெடுத்திட தமிழக அரசால்

அறிவுறுத்தப்பட்டுள்ளது. இப்பணியில் ஈடுபடும் கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர், வருவாய் கோட்டாட்சியர், வேளாண்மைத் துறையினர், தோட்டக்கலைத் துறையினர் உள்ளிட்ட தொடர்புடைய அனைத்து துறை அலுவலர்களையும் ஒருங்கிணைந்து ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படுகிறது. ஆய்வுப் பணியில் ஈடுபடும் அலுவலர்கள் விவசாயிகளின் விவரம், வேளாண்மை பரப்பளவு, வேளாண் பயிர்கள், சிறுகுறு விவசாயி உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் பயிற்சியில் அளிக்கப்பட்டுள்ளதற்கு இணங்க முழுமையாக எந்தவித சந்தேகமும் இல்லாமல் பயிற்சியை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பணியின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு அலுவலர்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஒருவர் கூட விடுபடாத வகையில் கணக்கெடுப்புப் பணியை மிகச் சரியாக மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார். கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.சுகுமார், இணை இயக்குநர் (வேளாண்மை) சௌந்தரராஜன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தமிழ்ராஜன், உதவி ஆணையர் (கலால்) குமரேசன், அரசு சார்பு செயலர்கள் எஸ்.ராமமூர்த்தி, ஆர்.முரளி, எஸ்.ராமகிருஷ்ணன், வருவாய் கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர், தோட்டக்கலை அலுவலர்கள், வேளாண்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.